# பொதுக்காலம் 21ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் நம்பிக்கையுள்ள சகோதர சகோதரிகளே! நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து ஆண்டின் பொதுக்காலத்தின் 21ஆம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். ஆண்டவரின் வார்த்தைகளைத் தியானித்து, அவரது நன்மைத்தனத்தை அனுபவித்து இரக்கத்தைச் சுவைத்த எவரும் ஆண்டவரை விட்டு என்றுமே விலகுவதில்லை என்பதைச் சிந்திக்க இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

இயேசுவின் போதனையைக் கேட்டு, புதுமையைக் கண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். "நம்மிடையே பெரிய இறைவாக்கினர் தோன்றியிருக்கின்றார்" என்று ஆர்ப்பரித்தனர். ஆனால் இயேசு, "வானிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு நான்" என்ற உண்மையைச் சொன்னபோது அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உண்மை கசக்கும் என்பதற்கேற்ப இயேசுவின் சீடர்களுக்கு உண்மைகள் கசந்தது. இயேசுவின் அருளுரைகள் எதுவாயினும் அது சவால் நிறைந்ததாகவே அமைகிறது.

"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" என்ற திருப்பாடலுக்கு ஏற்ப இயேசுவின் அன்பைச் சுவைத்துப் பார்த்து அதை மற்றவர்களுக்கு அறியச் செய்ய வேண்டுமென்ற புனித பவுல் அடிகளாரின் வார்த்தைகளை வாழ்வாக்க முயல்வோம். பேதுரு கூறியது போல் வாழ்வு தரும் வார்த்தைகள் இயேசுவிடம் மட்டுமே உள்ளது. எனவே அதை இறுகப் பற்றிக் கொள்வோம். நிலைவாழ்வு தரும் ஆண்டவரை நம்பி ஏற்போம். இயேசுவின் பக்தர்களாக இல்லாமல் உண்மையான சீடர்களாய் வாழவும், கிறிஸ்துவை விட்டு விலகாத மக்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நம்பிக்கையிலும் இறை ஞானத்திலும் வழிநடத்த தேவையான அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா! எம் இந்திய நாட்டை ஆட்சி செய்கின்ற தலைவர்களை ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் தன்னலமின்றி பொதுநலத்தோடு உழைக்கவும், நாட்டின் ஒற்றுமைக்காகவும், வளர்ச்சிக்காகவும் பாடுபடவும் வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆற்றலின் இறைவா! உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் வேறு தெய்வங்களை நாடிச் செல்லாமல், எல்லா நேரத்திலும் நீர்மட்டும்தான் உண்மைக்

கடவுள் என்பதை முழுமனதோடு ஏற்றுக் கொண்டு உமக்கு மட்டுமே ஊழியம் செய்து வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் ஊற்றே எம் இறைவா! பசி, பிணி, நோய்கள், மனக்கவலைகளால் இறந்துபோன ஆன்மாக்களை நீர் உம் பாதம் ஏற்று, விண்ணக வாழ்வில் அவர்களுக்கு பங்களித்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com